THE HINDU 9 APR 2026

# Special Observer reviews poll preparedness in Coimbatore

A review meeting on election preparedness for the Assembly election was held at the Coimbatore Collectorate on Wednesday. The meeting was chaired by Special Election Observer Pratap Singh in the presence of District Election Officer and Collector Pavankumar G. Giriyappanavar. Officials from various enforcement agencies, election observers, and monitoring officers attended. Mr. Singh instructed officials to ensure strict monitoring of election expenditure and adherence to procedures during vehicle checks, including seizure of unaccounted cash, valuables, and liquor. He also stressed the need for monitoring online activities and following the guidelines of the Election Commission of India. He directed all departments to work in coordination to ensure smooth conduct of the election.

தினத்தந்தி 9 APR 2026



கூட்டத்தில் கலெக்டர் பவன்குமார் பேசிய போது எடுத்த படம்.

8

### கோவை கலெக்டர் அலுவலகத்தில்

# சிறப்பு தேர்தல் பார்வையாளர் ஆய்வு கூட்டம்

கோவை, ஏப்.9-

கோவை கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று சிறப்பு பார்வையாளர் தலைமையில் நடைபெற்றது.

## ஆய்வு கூட்டம்

கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்ட மன்ற தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு வருகிற 23-ந் தேதி நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் தேர்தலை முன்னிட்டு கோவை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு கோவைக்கான சிறப்பு தேர்தல் பார்வையாளர் பிரதாப் சிங் தலைமை தாங்கினார். மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான பவன்குமார் முன்னிலை வகித்து மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பணிகள் குறித்து எடுத்து கூறினார்.

கூட்டத்தில் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் பேசியதாவது:-

## நடைமுறைகள்

தேர்தல் சமயத்தில் தேர்தல் செலவினம் மற்றும் கண்காணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், வாகன தணிக்கையின் போது பணம், மதிப்புடைய பொருட்கள், மதுபானங்கள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றுகையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும், இணையதளம் கண்காணிப்புகள் குறித்தும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றப்படுவது குறித்தும், அனைத்து அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்றிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் சஞ்சய் குமார், பிரஞ்சல் யாதவ், யசேந்திர சிங், கனில் குமார் யாதவ், கிருஷ்ண ஆதித்யா, தேர்தல் செலவின பார்வையாளர்கள் ரோகிணி, விகாஷ் சிங், ஸ்ரீதர் பேரா, ராம் செகாவத், பிரியங்கா தார், சச்சின்குமார் சிங், பியூஷ் சுக்லா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி 9 APR 2026



கூட்டத்தில் கலெக்டர் பவன்குமார் பேசிய போது எடுத்த படம்.

8

## கோவை கலெக்டர் அலுவலகத்தில்

# சிறப்பு தேர்தல் பார்வையாளர் ஆய்வு கூட்டம்

கோவை, ஏப்.9-

கோவை கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று சிறப்பு பார்வையாளர் தலைமையில் நடைபெற்றது.

### ஆய்வு கூட்டம்

கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்ட மன்ற தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு வருகிற 23-ந் தேதி நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் தேர்தலை முன்னிட்டு கோவை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு கோவைக்கான சிறப்பு தேர்தல் பார்வையாளர் பிரதாப் சிங் தலைமை தாங்கினார். மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ! பவன்குமார் முன்னிலை வகித்து மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பணிகள் குறித்து எடுத்து கூறினார்.

கூட்டத்தில் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் பேசியதாவது:-

### நடைமுறைகள்

தேர்தல் சமயத்தில் தேர்தல் செலவினம் மற்றும் கண்காணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், வாகன தணிக்கையின் போது பணம், மதிப்புடைய பொருட்கள், மதுபானங்கள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றுகையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும், இணையதளம் கண்காணிப்புகள் குறித்தும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றப்படுவது குறித்தும், அனைத்து அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்றிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் சஞ்சய் குமார், பிரஞ்சல் யாதவ், யசேந்திர சிங், சுனில் குமார் யாதவ், கிருஷ்ண ஆதித்யா, தேர்தல் செலவின பார்வையாளர்கள் ரோகினி, விகாஷ் சிங், ஸ்ரீதர் பேஹரா, ராம் .செகாவத், பிரியங்கா தார், சச்சின்குமார் சிங், பியூஷ் சுக்லா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன் 9 APR 2026

# கட்சியினர் வாகனங்களை சோதனை செய்தீர்களா...?

## தேர்தல் சிறப்பு பார்வையாளர் விசாரணை



தமிழக சட்டமன்ற தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் பவன்குமார் முன்னிலையில் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. அருகில் மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன் உள்ளிட்டோர் உள்ளனர்.

**கோவை, ஏப்.9:** கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் சட்டமன்ற பொது தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில் அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்களுக்கான நடைமுறைகள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று நடந்தது.

இதில் கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமார், தேர்தல் பார்வையாளர்கள், கணக்கு பார்வையாளர்கள், மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன், கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன், கோவை மாவட்ட எஸ்பி கார்த்திகேயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்களை கட்சியினர் வழங்கினார்களா, இது தடுக்கப்பட்டதா, எந்த கட்சியினர் எந்த பொருட்களை மக்களுக்கு கொடுத்தார்கள், எங்கே எத்தனை முறை சென்று பறக்கும் படையினர் ஆய்வு செய்தார்கள், 20 நாட்களுக்கு மேலாகியும் ஏன் கட்சியினர் தவறுகளை தடுக்கவில்லை, பூத் கமிட்டி அலுவலகம், மற்ற பகுதிகளில் நடத்தை விதிகள் மீறல் தடுக்காமல் என்ன செய்தீர்கள் என கேட்டார்.

பல இடங்களில் பறக்கும் படை வாகனங்களை காணவில்லை, சிலர் மர நிழலில் வாகனங்களை நிறுத்தி ஓய்வு எடுப்பதாகவும், பல இடங்களில் பறக்கும் படை ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு முறையாக செல்லவில்லை என கூறப்படுகிறது.

இதை ஏன் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் கவனிக்கவில்லை. பொதுமக்களின் வாகனங்களை மட்டுமே ஏன் சோதனை செய்கிறீர்கள், கட்சிகாரர்கள், வேட்பாளர்கள் வாகனங்களை சோதனை செய்யவில்லையா என சிறப்பு பார்வையாளர் கேட்டார். மேலும் பணம், பரிசு பொருட்கள் வழங்கப்படுகிறதா, ஓட்டு பதிவுக்கு முந்தைய நாட்களுக்கு வழங்க பதுக்கி வைத்திருக்கிறார்களா, உளவு தகவல்களை பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு படை சேகரித்துள்ளதா, போலீஸ் மூலமாக தகவல் வருகிறாதா, பொது மக்களின் புகார்களை முறையாக வாங்கினீர்களா, அது தொடர்பான ரகசியம் காக்கப்படுகிறதா என விசாரித்தார்.

கோவை மாவட்டத்தில் அமைதியான முறையில் தேர்தல் பணிகள் நடக்கிறது. எந்த விதிமுறை மீறலும் இல்லை என தேர்தல் பிரிவினர் தெரிவித்தனர். நல்ல முறையில் சோதனை நடத்த வேண்டும். முறையாக பணி செய்தால் தான் தவறுகளை தடுக்க முடியும். வரும் நாட்களில் அலட்சியமாக இருக்க கூடாது என இந்த கூட்டத்தில் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.

இந்து தமிழ் 9 APR 2026

### கோவை, திருப்பூரில்

# தேர்தல் பிரிவு அதிகாரிகளுடன் சிறப்பு பார்வையாளர் ஆலோசனை




▲ கோவையில் தேர்தல் பிரிவு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய தேர்தல் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் உள்ளிட்டோர்.

படம்: ஜெ.மனோகரன்

■ கோவை / திருப்பூர்

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, கோவைக்கு நியமிக்கப்பட்ட அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தேர்தல் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் தலைமை வகித்தார். மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான பவன்குமார் கிரியப்பனவர் முன்னிலை வகித்தார். மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் விளக்கினார்.

அதைத் தொடர்ந்து, தேர்தல் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் பேசும்போது, தேர்தல் செலவினம் மற்றும் கண்காணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், வாகனத் தணிக்கையின் போது பணம், மதிப்புடைய பொருட்கள், மதுபானங்கள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றுகையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், இணையதளம் கண்காணிப்புகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவது குறித்து விளக்கினார். அனைத்து அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

கூட்டத்தில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள், தேர்தல் செலவின பார்வையாளர்கள், 10 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் காவல் பார்வையாளர், மாநகர காவல் ஆணையர் என்.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்றனர்.

இதேபோல, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவைத்தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையிலான ஆய்வுக் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான மனிஷ் நாரணவரே முன்னிலை வகித்தார்.

இந்தக்கூட்டத்தில், அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பிரிவு அதிகாரிகள் பங்கேற்றனர். இதில், பணம், பொருள்கள் கைப்பற்றும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இதில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள், தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமணி 9 APR 2026

# தேர்தல் அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்




தேர்தல் அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம்.

IX

கோவை, ஏப். 8: தமிழ்நாடு சட்டப் பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, கோவை மாவட்டத்தில் 10 தொகுதிகளில் தேர்தல் அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு, தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமை வகித்தார். மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான பவன்குமார் க. கிரியப்பனவர் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் 10 சட்டப் பேரவைத் தொகுதிகளில் நடைபெற்று வரும் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் விளக்கினார்.

தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப்சிங், தேர்தல் சமயத்தில் தேர்தல் செலவினம் மற்றும் கண்காணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், வாகனத் தணிக்கையின்போது பணம், மதிப்புடைய பொருள்கள், மது பானங்கள் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும், இணையதளம் கண்காணிப்புகள் குறித்தும், தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றப்படுவது குறித்தும், அனைத்து அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்றிட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், 10 தொகுதிகளின் தேர்தல் அலுவலர்கள், மாநகர காவல் ஆணையர் என். கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர் 9 APR 2026

## பறிமுதல் பத்தாது

# கண்காணிப்பை பலப்படுத்த உத்தரவு

கோவை, ஏப். 9–

கோவை மாவட்டத்துக்கென நியமிக்கப்பட்டு உள்ள அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்த ஆய்வு கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

மாவட்ட தேர்தல் அதிகாரி பவன்குமார் முன்னிலை வகித்தார். பொது பார்வையாளர் சஞ்சய்குமார், போலீஸ் பார்வையாளர் சுதீர்குமார் போரிகோ மற்றும் பார்வையாளர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் பேசியதாவது:

வேட்பாளர்கள் செய்யும் தேர்தல் செலவினங்களை விடுபடாமல் கண்காணிக்க வேண்டும். வாக்காளர்களை கவர பணம், பரிசு பொருட்கள் கொடுப்பதை முற்றிலும் தடுக்க வேண்டும்.



■ சட்டசபை தேர்தலுக்கான சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில், கோவை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று ஆய்வு கூட்டம் நடந்தது.

வாக்காளர்களை கவர பணம், பரிசு பொருட்கள் கொடுப்பதை முற்றிலும் தடுக்க வேண்டும். பணம், பொருட்கள் கொண்டு செல்வதை விழிப்புடன் கண்காணித்து பறிமுதல் செய்ய வேண்டும். அதையும் மீறி கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணம், பொருட்கள் கொண்டு செல்வதை விழிப்புடன் கண்காணித்து பறிமுதல் செய்ய வேண்டும். அதையும் மீறி கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பறக்கும் படையினர் வாகன சோதனை செய்யும்போது தேர்தல் ஆணைய விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

இணையதளங்களை கண்காணிக்க வேண்டும். பறிமுதல் செய்துள்ள பணம், பொருட்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன; பறக்கும் படையினர் சோதனையை தீவிரப்படுத்த வேண்டும். வருமான வரித்துறையினர், வணிக வரித்துறையினர், சுங்க வரித்துறையினர் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும். மாநில எல்லையில் சோதனை செய்ய வேண்டும்; போதைப்பொருட்கள் கடத்தலை தடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

மாலை மலர் 8 APR 2026



கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான பவன்குமார் தலைமையில் நடந்தபோது எடுத்தபடம்.

**கோவை மாவட்ட**

# சட்டசபை தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் ஆலோசனை

கோவை, ஏப்.8—

கோவை மாவட்டத்தில் வருகிற 23–ந்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதை ஒட்டி 13 தேர்தல் பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 7 பொது பார்வையாளர்கள், 5 தேர்தல் செலவு கண்காணிக்கும் பார்வையாளர்கள், ஒரு காவல் பார்வையாளர் ஆகியோர் அடங்குவர்.

**ஆலோசனை**

இந்த தேர்தல் பார்வையாளர்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியாக சென்று வேட்பாளர்கள் தேர்தல் செலவு கண்காணிப்பது, கணக்கிடுவது மற்றும் தேர்தல் ஏற்பாடுகளை கவனிப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இன்று இந்த தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கட்டிடத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு கோவை மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட கலெக்டருமான பவன்குமார் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில், தேர்தல் பார்வையாளர்கள் பிரதீப் சிங், சஞ்சய் குமார் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன், கூடுதல் தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான சிவகுரு பிரபாகரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**விதிமுறை மீறல்கள்**

அப்போது கோவை மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்தும், பாதுகாப்பு பணிகள் மற்றும் பணம் கொடுப்பதை தடுக்க எடுத்து வரும் நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் அவற்றை திருப்பி கொடுத்த பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

தேர்தல் விதிமுறை மீறல்கள், வழக்குகள், வாக்குச்சாவடிகள் நிலை உள்ளிட்ட பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் அரசியல் கட்சிகளின் செலவு கணக்கு விவரங்களை கணக்கிடுவது தொடர்பாக உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் முரசு 8 APR 2026



தமிழக சட்டமன்ற தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில், மாவட்டத் தேர்தல் அலுவலர் கலெக்டர் பவன்குமார் முன்னிலையில் அதிகாரிகள் கலந்துகொண்ட ஆய்வு கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் இன்று நடந்தது. அருகில் மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன் உள்ளார்.

மாலை முரசு 8 APR 2026

4

# கோவை மாவட்ட சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம்!

கோவை. ஏப்.8

கோவை மாவட்டத்தில் வருகிற 23ஆம் தேதி சட்டமன்ற தேர்தல நடைபெறுவதை ஒட்டி 13 தேர்தல் பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒரு காவல் பார்வையாளர் 5 தேர்தல் செலவு கண்காணிக்கும் பார்வையாளர்கள், 7 பொது பார்வையாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

இந்த தேர்தல் பார்வையாளர்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியாக சென்று வேட்பாளர்கள் தேர்தல் செலவு கண்காணிப்பது கணக்கிடுவது மற்றும், தேர்தல் ஏற்பாடுகளை கவனிப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இன்று இந்த தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கட்டிடத்தில் நடந்தது. கூட்டத்திற்கு கோவை மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட கலெக்டர் பவன் குமார் தலைமை தாங்கினார்.

தேர்தல் பார்வையாளர்கள் பிரதீப் சிங், சஞ்சய் குமார் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன் கூடுதல் தேர்தல் அலுவலரும் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் மற்றும் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். அப்போது கோவை மாவட்டத்தில் . சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்தும், பாதுகாப்பு பணிகள் மற்றும் பணம் கொடுப்பதை தடுக்க எடுத்து வரும் நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் அவற்றை திருப்பி கொடுத்த பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. தேர்தல் விதிமுறை மீறல்கள் வழக்குகள், வாக்குச்சாவடிகள் நிலை உள்ளிட்ட பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் அரசியல் கட்சிகளின் செலவு கணக்கு விவரங்களை கணக்கிடுவது தொடர்பாக உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளும் செய்யப்பட்டது.

மாலை முரசு 8 APR 2026



கோவை மாவட்ட சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கோவை மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட கலெக்டர் பவன் குமார் தலைமை தாங்கினார். தேர்தல் பார்வையாளர்கள் பிரதீப் சிங், சஞ்சய் குமார் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன் கூடுதல் தேர்தல் அலுவலரும் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.